**சாட்சிய வாக்கு மூலம்**

**(அத்தியாயம் 25 பாரதிய நாகரிக் சுரக்ஷா சன்ஹிதா)**

**பட்டியல் சாதியினர் மற்றும் பழங்குடியினர் ( வன்கொடுமை தடுப்பு ) சட்டம் -1989 -ன் வழக்குகளை விசாரிப்பதற்கான சிறப்பு நீதிமன்றம் ,**

**திருவாரூர் - 610 001**

**தேதி:** 10.09.2025

| | | |
|---|---|---|
| **சிறப்பு அமர்வு வழக்கு எண்.** | : | 11/2025 |
| **சாட்சியின் வரிசை எண்.** | : | அ.சா-7 |
| **சாட்சியின் பெயர்** | : | தேவகி |
| **கணவர் பெயர்** | : | ரெத்தினவேல் |
| **கிராமம்** | : | வலங்கைமான் |
| **தாலுக்கா** | : | வலங்கைமான் |
| **தொழில்** | : | தாசில்தார் |
| **வயது** | : | 54 |

2025 ம் ஆண்டு செப்டம்பர் மாதம் 10 ஆம் நாள் ஆகிய இன்று இந்த நீதிமன்றத்தில் உதவியாளராக பணிபுரியும் திருமதி. ஆர். அன்பரசி அவர்களால் இந்த சாட்சிக்கு 1969 ம் ஆண்டு உறுதிமொழி சட்டத்தின் சத்தியபிரமாணம் செய்யப்பட்டு அதன் அடிப்படையில் சாட்சிய வாக்குமூலம் பதிவு செய்யப்படுகிறது.

எதிரி ஆஜர். அரசு வழக்கறிஞர் மற்றும் எதிரி வழக்கறிஞர் ஆஜராகி உள்ளனர்.

**முதல் விசாரணை**

நான் மேற்கண்ட முகவரியில் வசித்து வருகிறேன். நான் தற்போது தனி வட்டாட்சியர் (சமூக பாதுகாப்பு திட்டம்) ஆக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 2023 ஆம் வருடம் குடவாசல் வட்டாட்சியராக பணியாற்றிய போது

நன்னிலம் காவல் துணை கண்காணிப்பாளர் அவர்கள் கேட்டு கொண்டதற்கு இணங்க பதிக்கப்பட்ட பாலசுப்ரமணியன் மகன் செந்தில்குமார் இந்து துளுவ வெள்ளாளர், செல்வராஜ் மகன் தியாகராஜன் இந்து பறையன் வகுப்பை சார்ந்தவர் என்று கிராம நிர்வாக அலுவலர் மற்றும் வருவாய் ஆய்வாளர் ஆகியோரின் விசாரணையின் அடிப்படையில் 17.06.2023 ஆம் தேதி ஜாதி சான்றிதழ் வழங்கினேன். என்னிடம் காட்டப்படும் எதிரி செந்தில்குமார் ஜாதி சான்றிதழ் அ.சா.ஆ-3 ஆகவும், அ.சா-1 தியாகராஜன் என்பவர் தொடர்பாக வழங்கப்பட்ட ஜாதி சான்றிதழ் அ.சா.ஆ-4 ஆக குறியீடு செய்யப்படுகிறது.

**<u>எதிரி தரப்பு குறுக்கு விசாரணை:</u>**

துணை காவல் கண்காணிப்பாளர் ஜாதி சான்றிதழ் வழங்குமாறு கேட்டு கொண்ட வேண்டுகோள் கடிதத்தை நான் தாக்கல் செய்துள்ளேனா என்றால் நான் எதுவும் தாக்கல் செய்யவில்லை. நான் முறையாக விசாரணை செய்யாமல் காவல் துணை கண்காணிப்பாளர் கேட்டு கொண்டதற்கு இணங்க சான்று வழங்கியுள்ளேனா என்றால் இல்லை. முறையாக விசாரணை செய்து சான்றிதழ் வழங்கியுள்ளேன்.

சாட்சி சொல்ல சொல்ல என் உத்தரவுப்படி திறந்த நீதிமன்றத்தில் என் முன்னிலையில் தட்டச்சு செய்யப்பட்டு பின் சாட்சியிடம் மேற்படி வாக்குமூலம் படித்துக் காண்பித்த போது சாட்சி சரியென்று என் முன்பாக கையொப்பம்செய்தார்.

VADIVEL M

Digitally signed by VADIVEL M
Date: 2025.09.10 16:22:41 +0530

அமர்வு நீதிபதி,
எஸ்.சி /எஸ்.டி (வன்கொடுமை தடுப்பு )
வழக்குகளை விசாரிப்பதற்கான சிறப்பு
நீதிமன்றம், திருவாரூர்.